## காணி சீர்திருத்த ஆணைக்குழு – 2017

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1972 இன் 01 ஆம் இலக்க காணி சீர்திருத்த அதிகாரச்சட்டத்தின் 56 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை ஆணைக்குழுவின் தலைவருக்கு 2018 ஏப்ரல் 26 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பாக ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பொதுத்துறை கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களில் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட்டதாக கணக்கீட்டுக் கொள்கைகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மாவட்ட செயலகங்களிலிருந்து அறவிடப்படுகின்ற குத்தகை வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.2 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 03**

(i) ஊழியர் நலன்புரிக்காக ஒதுக்கீடு மேற்கொள்ளும் போது இலங்கை கணக்கீட்டு நியமம் 03 இன் 9 ஆம் பந்தியின் பிரகாரம் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் பிரயோகங்களை அடிப்படையாகக் கொண்டு கொள்கையொன்று தயாரிக்கப்பட்ட வேண்டும். எனினும், இதற்கு இணங்காத வகையில் ஊழியர்களின் சேவைக்காலம் மற்றும் இறுதியாக பெற்றுக்கொண்ட சம்பளத்தில் அரைப்பங்காக பிற்காலத்தில் ஊழியர் நலன்கள் ஒதுக்கீட்டிற்காக கொள்கையொன்று இனங்காணப்பட்டு ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) நிறுவனத்தினால் தற்போது பயன்படுத்திக் கொண்டு வரப்படும் சேவைக்காலம் மற்றும் இறுதியாக பெற்றுக்கொண்ட சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு ஊழியர்களுக்காக ஊழியர் நலன் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இந்த கணிப்பீட்டை பரிசோதித்த போது மீளாய்வாண்டிற்குரிய ஒதுக்கீடு ரூபா 948,438 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

(i) நியமத்தின் 47 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் உருப்படிகளின் நியாயமான பெறுமதி அதன் முகப்பு பெறுமதி பொருண்மையானதாக மாறும் போது மீண்டும் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்பாட்டு ஆயுட்காலம் என்பன கழிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டிலும் அறிக்கையிடப்படும் காலப்பகுதியொன்று இறுதியின் போது மீளாய்வு செய்யப்பட வேண்டும். எனினும், ஆணைக்குழுவினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் 2.1(ஆ) குறிப்பின் கீழ் காண்பிக்கப்பட்ட ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் செயற்திறனான பயன்படு ஆயுட்காலம் சரியானதல்ல என அவதானிக்கப்பட்டது.

## 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான ரூபா 676,169,345 ஆன காணி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாத சொத்துக்கள் மற்றும் நடைமுறைச் சொத்துக்களுக்கு இடையே காண்பிக்கப்பட்டிருந்தது. இச்சொத்துக்களிலிருந்து ஒரு பகுதி குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அந்த ஆதனங்கள் முதலீட்டு ஆதனங்கள் மற்றும் விற்பனைக்காக காணப்படும் ஆதனங்கள் எனின் உரிய பிரகாரம் வகைப்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், வருடாந்தம் மேற்கொள்ளப்படும் காணி சுவீகரிப்பு மற்றும் விற்பனை என்பன அந்த இருப்பிற்கு சீராக்கப்பட வேண்டிய போதிலும், அது முறைப்படி மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 2003 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் சிறிய சீராக்கமொன்று மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் காரணமாக 1978 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை 39 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் மேற்படி இருப்பு ஒரே பெறுமதியை எடுத்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டப் பிரிவின் அறிக்கையின் பிரகாரம் கிடைக்க வேண்டிய கனிய வள வருமானம் ரூபா 108,684,214 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 60,250,626 ஆக காண்பிக்கப்பட்ட காரணத்தினால் அவ்வருமானம் ரூபா 48,433,588 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2017 ஆம் ஆண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 6,073,745 திரட்டிய மிகைக்கு சீராக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் மிகை அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் குறித்த திறைசேரி உண்டியல் வட்டி ரூபா 5,775,431 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 1,543,468 ஆக காண்பிக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டிற்குரிய வட்டி வருமானம் ரூபா 4,231,963 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டின் போது முன்னதாக கிடைத்த திறைசேரி உண்டியல் வட்டி வருமானம் ரூபா 212,870 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்படாததன் காரணமாக நடைமுறைப் பொறுப்புக்கள் அப்பெறுமானத்தால் கூடுதலாகவும் மீளாய்வாண்டின் மிகை குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஊ) நீண்டகாலமாக 4 அரச நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய காணி குத்தகை வருமானம் ரூபா 39,472,992 மற்றும் 10 நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 103,923,311 ஆன காணி விற்பனை வருமானத்தை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) வேலை பூர்த்தி செய்யப்பட்டு தற்போது பயன்படுத்தப்படும் லிந்துல சுற்றுலா விடுதி, பாம் தோட்டத்திற்குரிய கட்டிடம் மற்றும் தவுல் குருத்துவத்தை கட்டிடங்களுக்கு ரூபா 1,468,138 ஐ மூலதனமாக்குவதற்குப் பதிலாக நடைமுறை வேலையின் கீழ் தொடர்ந்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) காணி வழங்கப்பட்ட 10 உத்தியோகத்தர்களிடமிருந்து 2007 முதல் 2015 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட்டிருந்த ரூபா 100,000 ஆன முற்பணம், காணி விற்பனை முற்பணக் கணக்கிலிருந்து அகற்றி திரண்ட மிகைக்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) அறவிடப்பட வேண்டிய நிலுவை பயன்பாட்டுக் கட்டணம் மற்றும் பிரவேசக் கட்டணம் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் 09 மாவட்டங்களுக்குரிய மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியில் கணக்கீடு செய்யப்படாத பெறுமதி முறையே ரூபா 4,256,405 மற்றும் ரூபா 1,017,990 ஆக இருந்தது.

(ஈ) நீண்டகாலமாக இருந்து வரும் ரூபா 2,392 மில்லியன் அறவீடுகள் நிச்சயமற்ற கடன்பட்டோர் மீதிகள் அதாவது மொத்தச் சொத்துக்களில் 49 சதவீதம் எதிர்காலத்தில் அறவிடப்பட முடியாதிருந்த போதிலும் அக்கடன்பட்டோரிடமிருந்து ரூபா 8.2 மில்லியன் மாத்திரம் நட்டக் கடனாக கழித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், அறவிடமுடியாக் கடன் ஒதுக்கீட்டின் அடிப்படை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் இக்கடன் அறவீடு நிச்சயமற்றதாக இருந்த போதிலும் அது தொடர்பாக புலனாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு போதியளவு ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த 06 நானாவித வருமான உருப்படிகளின் பெறுமதி ரூபா 122,897,000 மற்றும் வருமானப் பிரிவின் வருமான அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டிருந்த பெறுமதி ரூபா 26,371,334 ஆக இருந்தமையால் ரூபா 96,525,666 ஆன விளக்கமளிக்கப்படாத வேறுபாடொன்று காணப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக அக்கொடுக்கல் வாங்கல்களை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தன.

(அ)

| கணக்கீட்டு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (i) கட்டிடங்கள் | 676,169,345 | மெய்மையாய்வு அறிக்கை |
| (ii) மோட்டார் வண்டிகள் | | |
| (iii) எழுதுகருவி இருப்பு | | |
| (iv) காணி | | காணிகள் தொடர்பான விபரமடங்கிய பதிவேடுகள்/பட்டோலை |
| (v) ஹதபிம அதிகார சபையிலிருந்து கிடைக்க வேண்டிய மீதி | | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| (vi) இலங்கை பெருந்தோட்ட கூட்டுத்தபனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய மீதி | | |

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையிலிருந்து 12 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக ஆணைக்குழுவிற்கு அறவிடப்பட வேண்டியதாக ரூபா 2,352,148,782 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டின் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அவ்வாறான மீதியொன்று சபைக்கு செலுத்த வேண்டியுள்ளதாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மேற்படி மீதி உறுதிப்படுத்தலுக்காக மீதி உறுதிப்படுத்தல் மற்றும் ஏனைய உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் மேற்படி கடன் மீதியின் நிலைத்திரு தன்மை மற்றும் பூரணத்துவ தன்மை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியவில்லை.

## 2.3 பெற வேண்டிய மற்றும செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 12 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக 04 அரச நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 11,480,095 தொகை அறவிடுவது தொடர்பாக அமைச்சு செயலாளர், தலைவர் மற்றும் திறைசேரியின் ஈடுபாட்டுடன் சகல தரப்பினரையும் அழைத்து தீர்மானமொன்றை பெற்றுக்கொள்ள வேண்டுமென 2016 மார்ச் 23 ஆந் திகதிய பொது முயற்சிகள் மீதான குழுவினால் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இவ்வறிக்கை திகதி வரையிலும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் 18 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பல்வேறு கடன்பட்டோரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,311,017 தொகை 1 ஆண்டு முதல் 8 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலவீச்சில் சேவையை விட்டுச் சென்ற / வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 45 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 653,098 அறவிடப்படாமல் காணப்பட்டன.

(இ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த காணி விற்பனை முற்பணங்களில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 10,433,000 தொகையும் 5 இற்கும் 8 இற்கும் இடைப்பட்ட ரூபா 910,000 தொகையும் 02 ஆண்டுகளிற்கு 05 இற்கு இடைப்பட்ட ரூபா 1,160,000 தொகையாக இருந்ததுடன் மொத்த காணி விற்பனை முற்பணத்திலிருந்து 83 சதவீதம் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாக இருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இழப்பீட்டு தொங்கல் கணக்கின் மீதி ரூபா 109,959,493 ஆக இருந்ததுடன் 12 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இந்தக் கணக்கின் மீதியை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட குத்தகை வாடகை முற்பணங்களிலிருந்து 80 சதவீதம் அல்லது ரூபா 11,216,000 தொகை 2003 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆணைக்குழுவினால் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்காக பெற்றுக்கொண்ட முற்பணங்களைக் கொண்டிருந்தன. 2004 ஆகஸ்ட் 12 ஆந் திகதிய அமப/04/0858/001/005/111 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இக்காணி தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளாமை காரணமாக மேற்படி பணம் முற்பணமாக 12 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் 2011 ஆம் ஆண்டில் குத்தகை வாடகை வருமானமாக 2 நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொண்ட ரூபா 2,240,000 தொகை 06 ஆண்டு காலமாகவும் தீர்வு செய்யப்படாமல் அல்லது வருமானத்திற்கு எடுக்கப்படாமல் காணப்பட்டது.

(ஊ) வியாபாரம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளின் கீழ் வெவ்வேறு அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய பெறுமதியில் ரூபா 800,130 தொகை 11 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1972 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க காணி சீர்திருத்த அதிகாரச்சட்டம் (1) ஆம் பிரிவு | எவரேனும் நபருக்கு சொந்தமான 50 ஏக்கருக்கு மேற்பட்ட கமநல காணியை சுவீகரித்தல் மற்றும் காணியை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவிற்கு சுவீகரிக்கப்பட்ட 58 ஏக்கர் அளவிலான ஊரணிகாடுவத்த காணியை அபிவிருத்தி செய்வதற்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 19(அ) பிரிவு | சட்டரீதியான திட்டவட்டமான தீர்மானம் எடுக்கும் போது உரித்தாளர்களால் தமக்கு வைத்துக் கொள்வதற்குப் பொருத்தமான காணிக்காக விருப்பத்தை தெரிவித்து இருந்தால் அதனைக் கருத்திற் கொள்ள வேண்டிய போதிலும் அதற்கு முரணாக காணி உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (iii) 14 ஆம் பிரிவு | காணியின் சட்டரீதியான திட்டவட்டமாக வழங்கப்படும் போது உரித்தாளர்களின் குடும்பத்திற்குள் கையளிப்பு செய்வதற்கு முடியுமாக இருந்த போதிலும் அதற்கு முரணாக வெளித்தரப்பினருக்கு கையளிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பமொன்று அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | பொது முயற்சிகள், மேலதிக நிதியினை முதலீடுசெய்வதற்கு நிதி அமைச்சரின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் 2004 யூன் 30 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்தும் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் நிதி அமைச்சரின் அனுமதி பெறப்படாமல் ரூபா 125,000,000 முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமானக் கோவையின் நிதிப்பிரமானம் 571 | வைப்புச் செய்யப்பட்ட திகதி முதல் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வைப்புக்கள் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 201,500 ஆன கேள்வி வைப்புக்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2011 ஆகஸ்ட் 25 ஆந் திகதிய 11/நானா(015-1) ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் | அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் உட்பட அரச நிறுவனங்களினால் காணிகளை வழங்கும் போது விவசாய நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும் 5 ஏக்கருக்கு மேற்பட்ட காணிக்காக அமைச்சரவையின் முன்கூட்டிய அனுமதி பெறப்பட வேண்டிய போதிலும் ஹைபோட் தோட்டக் காணியில் 70 ஏக்கர் 02 ரூட் 17 பேர்ச் தேயிலை செய்கை மற்றும் கலப்பு பயிர்ச் செய்கைக்காக தனியார் கம்பனியொன்றுக்கு குத்தகைக்கு வழங்கும் போது அவ்வாறு அனுமதி பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் காணி சுவீகரிப்பு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (உ) | 2008 ஏப்ரல் 17 ஆந் திகதிய 2008/பொது/1 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் 1(i) மற்றும் (ii) ஆம் பிரிவுகள் | குறித்தவொரு ஆண்டினது நிலுவையாகவுள்ள பயன்பாட்டுக் கட்டணம் அவ்வாண்டிலேயே அறவிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனவும், வருடக் கணக்காக காணி பயன்பாட்டுக் கட்டணம் அறவிடப்படாதிருந்ததுடன் 11 மாவட்ட அலுவலகங்களில் நிலுவை பயன்பாட்டுக் கட்டணம் தொடர்பான விபரங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான ஆணைக்குழுவினது செயற்பாட்டு விளைவுகள் ரூபா 202,513,000 மிகையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 120,443,000 ஆகியமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 82,070,000 ஆன அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் நிர்வாகச் செலவினம் ரூபா 51,829,000 அதிகரித்திருந்த போதிலும், கருங்கல் வருமானம் ரூபா 82,195,000 ஆலும் கையேற்றல் இழப்பீட்டு வட்டி வருமானம் ரூபா 26,809,000 ஆலும் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 27,645,000 ஆலும் அதிகரித்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதானமான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 97 மில்லியனான ஆணைக்குழுவின் தேறிய இலாபம் 2015 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 55 மில்லியன் வரை குறைவடைந்திருந்த போதிலும் அதற்கு பின்னரான ஆண்டுகளில் படிப்படியாக அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 202 மில்லியனான தேறிய இலாபமொன்று உருவாகியிருந்தது. மேலும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் அரசிற்கு செலுத்திய வரி என்பவற்றைக் கருத்திற்கொண்டதன் பின்னர் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 296 மில்லியனான ஆணைக்குழுவின் பங்களிப்பு 2015 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 269 மில்லியன் வரை குறைவடைந்திருந்த போதிலும் அதற்கு பின்னைய ஆண்டுகளில் படிப்படியாக அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 470 மில்லியனாக இருந்தது.

### 3.2 ஆணைக்குழுவிற்கு எதிராக அல்லது ஆணைக்குழுவால் ஆரம்பிக்கப்பட்ட சட்டபூர்வ நிகழ்வுகள்

மீளாய்வாண்டின் இறுதியில் ஆணைக்குழுவிற்கு எதிராக மற்றும் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குகளின் எண்ணிக்கை 696 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் மாத்திரம் ஆணைக்குழுவிற்கு எதிராக 68 வழக்குகளும் ஆணைக்குழுவினால் 97 வழக்குகளும் தொடரப்பட்டிருந்தன. மேலும் மீளாய்வாண்டில் நீதிமன்ற தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 42 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரதிகள் ஒவ்வொரு கணக்காண்டு ஆரம்பமாவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம் பொது திறைசேரியின் செயலாளர் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டிற்காக நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டமொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய வருடாந்த பாதீடு, வருடாந்த பெறுகைத் திட்டம், மனித வள அபிவிருத்தி திட்டம், உள்ளக கணக்காய்வு திட்டம் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்பாட்டு மீளாய்வு

1972 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் ஏதாவதொரு நபருக்குச் சொந்தமான அதி கூடிய அளவிலும் கூடிய கமத்தொழில் காணிகள், அந்த நபர்கள் சொந்தமாக வைத்துக்கொள்ளாமை, பாதுகாக்கப்படுதல், சுவீகரித்தல் மற்றும் அக்காணிகளில் உற்பத்தி செய்தல், அக் காணிகளில் உருவாகும் தொழில்வாய்ப்புக்களின் அளவை அதிகரிக்கும் விளைவினை தரும் விதத்தில் அவற்றைப் பயன்படுத்துதல் என்பன ஆணைக்குழுவின் ஆரம்ப நோக்கங்களாகும். ஆணைக்குழுவின் நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்த 9 செயற்பாடுகளின் செயன்முன்னேற்றம் 50 சதவீதத்தினை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

(ஆ) 2016 மற்றும் 2017 ஆகிய இரண்டு ஆண்டுகளின் செயல்நடவடிக்கைத் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த பிரதான களஞ்சியம் முறையாக இராக்கை வடித்து தயாரித்தல், 5 S முறையில் பொருட்களை களஞ்சியப்படுத்தல், பிரதான களஞ்சியத்தை கணனிமயப்படுத்தல், முறையான செயலாற்றல் செயற்திட்டமொன்றை ஆரம்பித்தல், நிறுவனத்தின் பௌதீக வளங்களின் அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கை, ஆவணங்களை பாதுகாத்தல் மற்றும் முறையான ஆவணக் காப்பகத்தை ஸ்தாபித்தல், தேவையற்ற கோவைகளை கைதவிப்புச் செய்தல், ஆவணக் காப்பகத்தில் உள்ள கோவைகளை கணனிமயப்படுத்துதல் போன்ற எந்தவொரு செயற்பாடொன்றும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த காணிச் சொத்துக்களை நாளதுவரையாக்கும், வெளிக்கள புலனாய்வு மற்றும் முன்மாதிரிகளை தயாரித்தல், சட்டவாக்கத்தை நிச்சயப்படுத்தல், சிறு பராய பிள்ளைகளுக்கு காணி வழங்குதல், விகாரைகள் தேவாலய சட்டத்தின் பிரகாரம் காணிகளை விடுவிப்பதற்காக இனங்காணல், முன்னைய வழக்கு அறிக்கைகளை அண்மித்த சம்பவங்களை ஆய்வுசெய்தல், நீதிமன்ற நடவடிக்கைகளை தொடர்புபடுத்துவதற்காக அனைத்து நிறுவன தொடர்புகளை மேம்படுத்துதல், ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ள காணிகளைப் பதிவுசெய்தல் மற்றும் ஆவணங்களைப் பதிவு செய்தல் போன்ற எந்தவொரு செயற்பாடுகளும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் வீடமைப்பு நோக்கங்களிற்காக காணி சுவீகரிப்பு பிரிவிலிருந்து உரித்துப் பிரிவிற்கு 3038 உறுதிகள் தொடர்புபடுத்தப்பட்டிருந்ததுடன் 13 சந்தர்ப்பங்களில் 2751 உறுதிகளை விழாவாரியாக பகிந்தளிப்பதற்காக நேரடிச் செலவினமாக ரூபா 10,598,796 செலவிடப்பட்டிருந்தது.

(உ) 1972 இன் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் இழப்பீடு வழங்களுடன் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட உரிமை உறுதி செய்யப்படாத 100 கோவைகள் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்டதுடன் ஆண்டின் இறுதி வரையிலும் அக்கோவைகளுக்குரிய இழப்பீடுகளை தீர்வு செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஊ) மாவட்ட ரீதியாக காணப்பட்ட காணி தொடர்பான அட்டவணையொன்று தவிர ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட காணிகளின் அளவு, ஆண்டில் விற்கப்பட்ட காணியின் அளவு, குத்தகைக்கு வழங்கப்பட்ட காணி அளவு மற்றும் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணி அளவினை உறுதிப்படுத்தும் வகையில் காணி பதிவேடுகள் நாளதுவரையாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள ஆணைக்குழுவிற்குரிய 602 ஏக்கர் காணி 1982 ஆம் ஆண்டின் போது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்திற்காக மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், 1982 ஆம் ஆண்டின் போது ஜனவசமவினால் அக்காணி தென்னை பயிர்ச்செய்கை சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஜனவசமவினால் தென்னை பயிரச்செய்கை சபைக்கு காணி கையளிப்பின் சட்டரீதியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படாதிருந்ததுடன் சபையினால் பயன்படுத்தப்படும் இக்காணி ஒழுங்குமுறையாக்குவதற்கு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 ஆம் ஆண்டின்போது இக்காணியில் 50 ஏக்கர் அளவில் வெளி நபரொருவருக்கு ரூபா 200,000 முற்பணத் தொகையொன்றை பெற்றுக்கொண்டதன் பின்னர் உடமை கையளிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், சபைக்குச் சொந்தமான காணி, 1982 ஆம் ஆண்டு முதல் எவ்வித வருமானமும் அறவிடப்படாமல் வெளித்தரப்பினரால் உடமையாக்கி கொண்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆணைக்குழுவினால் அது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 தொழிற்பாட்டு செயற்பாடுகள்**

(அ) காலி மற்றும் கொழும்பு மாவட்டங்களில் அரச துறைக்காக கையளிக்கப்பட்டிருந்த காணி சுவீகரிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 1995 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை 200 காணித் துண்டுகள் அளவில் அரச நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் 16 காணித்துண்டுகளுக்காக மாத்திரம் இழப்பீடு அறவிடப்பட்டிருந்தது.

(ii) 1964 இன் 28 ஆம் இலக்க காணி சுவீகரிப்பு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் காணி அமைச்சின் விதிகளின் பிரகாரம் சபைக்குரிய 16 காணித்துண்டுகள் கையேற்கப்பட்டதாக 2000 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்த போதிலும் ஆணைக்குழுவினால் இழப்பீட்டினை அறவிடும் வரை மேற்கொள்ளப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) வெவ்வேறு நோக்கங்களுக்காக அரச நிறுவனங்களினால் 2005 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை கையேற்கப்பட்டிருந்த காணி தொடர்பாக ஆணைக்குழுவின் உரித்தினை உறுதிப்படுத்த முடியாமை காரணமாக காணிகளுக்குரிய இழப்பீட்டுப் பணம் நீதிமன்றத்தில் வைப்பு செய்யப்பட்ட 14 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**(ஆ) சட்டரீதியான உறுதி பெற்றுக்கொடுத்தல்**

1972 இன் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 50 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளை ஆணைக்குழு சுவீகரித்தன் கீழ் 1972-1974 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் உரித்துறுதி சமர்பிக்கப்பட்ட 230 காணிகள் தொடர்பாக 40 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் அவற்றில் 27 சதவீதத்திற்கு காணி வரிபடம் முன்வைக்கப்படாமை காரணமாகவும் 52 சதவீதம் உரித்துரிமையாளர்கள் முன்வராமை காரணமாகவும் (50 ஏக்கர் உரித்துள்ள) யாப்புரீதியான உறுதிகளை வழங்க முடியாதிருந்தது.

காணி வரிபடம் சமர்ப்பித்தல், மாவட்ட காணி மறுசீரமைப்பு அதிகார சபையின் தலையீட்டில் சம்பந்தப்பட்ட உரித்துரிமையாளர்களைக் கொண்டு செய்து கொள்ள வேண்டிய போதிலும் 40 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலப்பகுதியினுள் காணி வரிபடங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு யாப்பு ரீதியான உறுதி வழங்குதல் தாமதம் காரணமாக உரித்தாளர்களுக்கு இழப்பீடு கொடுப்பனவு தாமதமாகயிருந்தது.

(இ) கம்பஹா மாவட்டத்தின் மினுவாங்கொடை பிரதேச செயலக பிரதேசத்தின் பத்கடுவன கிராமத்தில் அமைந்தள்ள வல்ஜாலவத்த காணியிலிருந்து 01 ஏக்கர் 03 ரூட் 30.16 பேர்ச் ஆன அளவு தனியார் நிறுவனமொன்று 2002 யூன் 11 ஆந் திகதி 30 ஆண்டு காலப்பகுதிக்காக குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. முதல் 05 ஆண்டுகளில் குத்தகை வாடகை ஒரே தடவையில் அறவிடல் மற்றும் குத்தகை உடன்படிக்கை மேற்கொண்டதன் பின்னர் உடமையை கையளித்தல் இடம்பெற வேண்டிய போதிலும் எவ்வித குத்தகையொன்றை அறவிடாமல் 2002 ஆம் ஆண்டின் போது உடமை கையளிக்கப்பட்டிருந்ததுடன் குத்தகை வழங்குவதற்காக ஆணைக்குழு 09 ஆண்டுகளின் பின்னர் அதாவது 2011 ஆகஸ்ட் 23 ஆந் திகதியே அங்கீகாரத்தை வழங்கியிருந்தது. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை குத்தகைப் பணம் மற்றும் மதிப்பீட்டுக் கட்டணம் ரூபா 7,262,401 ஆக இருந்த போதிலும் இதுவரை இந்நிலுவை பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஹோமாகம டெம்பல்பேர்க் கைத்தொழில் பேட்டையிலிருந்தும் காரணவ தோட்டக் காணியிலிருந்தும் 04 காணித்துண்டுகள் 03 தனியார் கம்பனிகளுக்கு குத்தகைக்கு வழங்கியமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1988 ஆம் ஆண்டின் போது கைத்தொழில் பேட்டையிலிருந்தும் 2000 ஆம் ஆண்டின் போது காரணவவ தோட்டத்திலிருந்தும் இரண்டு தனியார் கம்பனிகளுக்கு குத்தகை வழங்கப்பட்டிருந்த முறையே 01 ஏக்கர் 11 பேர்ச் மற்றும் 01 ஏக்கர் 02 ரூட் வீதமான காணிக்காக 2002 மே 23 ஆந் திகதிய 2002/11 ஆம் இலக்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை குத்தகை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், கைத்தொழில் பேட்டையில் அமைந்துள்ள 81.8 பேர்ச் அளவிலான காணித் துண்டொன்றிற்காக 5 ஆண்டு வருடாந்த குத்தகை வாடகைத் தொகை ஒரே தடவையில் அறவிடப்படாமல் உடமை கையளிக்கப்பட்டிருந்தது.

(ii) 03 காணித் துண்டுகளுக்காக 12 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்த ரூபா 4,571,320 தொகையான நிலுவை வரித்தொகையை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கைத்தொழில் பேட்டையில் 11 கட்டத்தின் கீழ் 10 ஆம் இலக்க துண்டில் 02 ஏக்கர் அளவு 2005 யூலை 11 ஆந் திகதி குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் முதலாவது 5 ஆண்டுகளுக்கான குத்தகை பணம் மற்றும் மதிப்பீட்டுக் கட்டணம் ரூபா 2,312,311 தொகை 2016 நவம்பர் மாதத்தின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் குத்தகை உடன்படிக்கை தயாரிக்கப்படாதிருந்ததுடன் ரூபா 5,280,000 ஆன குத்தகை தொகை அத்திகதியில் நிலுவையாகக் காணப்பட்டன.

(உ) ஹோமாகமவில் அமைந்துள்ள டெம்பல் பேர்க் கைத்தொழில் பேட்டையின் 11 மற்றும் 15 ஆம் இலக்கத்துக்குரிய 0.414 ஹெக்டேயர் காணி கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால் 2011 ஆம் ஆண்டின் போது தனியார் நிறுவனமொன்றுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்நிறுவனம் வெற்றியளிக்காத காரணத்தினால் 2007 ஆம் ஆண்டு வரை நிலுவை குத்தகை அறவிடப்படாதிருக்கையில் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காமலும் ஆணைக்குழுவிற்கு அறிவிக்காமலும் மீண்டும் வேறு தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. குத்தகைக்கு வழங்கும் போது ஒரே தடவையில் அறவிடப்படும் 5 ஆண்டு குத்தகை தொகையை அக்கம்பனியிடமிருந்தும் அறவிடப்படாதிருந்ததுடன் முன்னைய கம்பனியின் நிலுவைப் பணத்தை புதிய கம்பனி செலுத்துவதாக இணங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்பட வேண்டிய நிலுவை குத்தகை தொகை ரூபா 3,999,374 ஆக இருந்தது.

(ஊ) தென்னை பயிர்ச்செய்கை சபைக்கு குத்தகைக்கு அடிப்படையில் வழங்கிய காணி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது ரன்தெனியா தோட்டம், லேன தோட்டம், நாகசோல தோட்டம், உடுகம தோட்டம், வெலிபிட்டிய தோட்டம், போபிட்டிய தோட்டம், போன்ற காணிகளை குத்தகைக்கு வழங்குதல் தொடர்பாக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. 1974 முதல் 1984 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இக்காணி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக குத்தகைக்கு வழங்குவதற்குரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மேலும், உரிய அளவீட்டு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல், குத்தகை வழங்குவதற்காக ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெறுதல், குத்தகை வாடகை மதிப்பீட்டினை பெற்றுக்கொள்ளல், குத்தகை உடன்படிக்கைகளுக்கு வராமல் இருந்ததுடன் 40 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இவ்வாறு குத்தகை செலுத்தப்படாமல் 1310 ஏக்கர் காணி அளவில் பயன்படுத்தப்பட்டு வந்தன. 2 காணிகளுக்கு மாத்திரத்திற்குரிய 1984 முதல் 2000 வரை மாத்திரம் அறவிடப்பட வேண்டிய தொகை மற்றும் மிகைக்கட்டணம் ரூபா 6,873,301 ஆக இருந்தது.

(எ) தென்னை பயிர்ச்செய்கை பண்ணும் நோக்கில் தென்னை பயிர்ச்செய்கை சபைக்கு 1974 மே 15 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு மாவட்டத்தின் பாசிக்குடாவத்த காணியில் 269 ஏக்கர் 3 ரூட் 39 பேர்ச் அளவிலான காணி சுற்றுலா கைத்தொழிலுக்குரிய விடுமுறை கேந்திரமொன்றை அமைப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. 1972 இன் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் 24(2) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் கையளிக்கப்பட்ட காணியொன்று ஏதேனும் நியதியொன்று அல்லது நிபந்தனையொன்றின் பிரகாரம் செயற்படுத்தப்படாவிட்டால் அக்கையளிப்பினை இரத்துச் செய்ய கூடியதாக இருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆண்டின் இறுதி வரையான நிலுவை குத்தகை தொகை ரூபா 51,478,177 ஆக இருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதிவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) ஹோமாகம வடக்கு பிடிபத்தவில் அமைந்துள்ள கபடாவத்த பெயரில் 50 ஏக்கர் 03 ரூட் 60 பேர்ச் காணி 1983 ஆம் ஆண்டின் போது விவசாயத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் விவசாய திணைக்களத்தினால் அந்த காணியில் 02 ஏக்கர் பாளி மற்றும் பௌத்த பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் கையேற்பு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 3,752,286 தொகை 1986 மற்றும் 1996 ஆண்டுகளின் போது விவசாயத் திணைக்களத்தினாலும், ரூபா 20,202,311 தொகை பாளி மற்றும் ளெத்த பல்கலைக்கழகத்தினாலும் ஆணைக்குழுவிற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2017 திசெப்ர் 31 ஆந் திகதி வரையிலும் கையளிப்பு செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கடுவெல கொரதொட்டவத்த காணியைச் சுற்றி அனுமதியற்ற கருங்கல் உடைத்தல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதாக 2011 ஆம் ஆண்டின் போது கடுவெல பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அக்காணி, அத்துமீறிய பயன்பாடு என ஆணைக்குழு தெரிந்திருந்தும் அதனை தவிர்த்துக் கொள்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) காணி கையேற்றல் கட்டளைச் சட்டத்தின் கீழ் இழப்பீட்டுத் தொகை ஆணைக்குழுவிற்கு வழங்குவதற்கு உடன்பட்டு காலி மாவட்டத்தின் ஹிக்கடுவ பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள மொன்ரோவியா தோட்டத்தில் 10 ஏக்கர் அளவில் தேவ பதிராஜ வித்தியாலயத்திற்கு 2014 செப்தெம்பர் 09 ஆந் திகதி ஆணைக்குழு அங்கீகாரத்தின் பேரில் கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இழப்பீட்டுத் தொகையை அறவிடுவது தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) ஆணைக்குழுவிற்குரிய பத்தேகம பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள மாகுருகொடவத்த காணியில் 16 ஏக்கர் அளவில் தென் மாகாண இளைஞர் நிலையமொன்றையும் விளையாட்டரங்கொன்றையும் நிர்மாணிப்பதற்கு தென் மாகாண விளையாட்டு அமைச்சினால் கையேற்கப்பட்டிருந்தது. இக்காணிக்குரிய நிர்மாணம் 2001 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2008 ஆம் ஆண்டிற்குரிய காணியின் மதிப்பீட்டுத் தொகை ரூபா 31,500,000 ஆக இருந்த போதிலும் இழப்பீட்டுத்தொகை தொடர்பாக சிக்கலான நிலைமையொன்றின் பேரில் கணக்காய்வு திகதியான 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை குறித்த இழப்பீட்டுத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) 1998 ஆம் ஆண்டின் போது அனுருத்த கிராமத்தை உருவாக்குவதற்காக பகிர்ந்தளிக்கப்பட்ட ஆணைக்குழுவிற்குச் சொந்தமான செனட் லெனாட் தோட்டம் காணியில் 47 காணித் துண்டுகளுக்கு இடையே 8 காணித் துண்டுகளுக்காக இழப்பீட்டுத்தொகை மற்றும் வட்டித்தொகை என்பவற்றை அறவிடுவதற்கு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(க்) காலி கரந்தெனிய பிரதேச செயலகப் பிரிவிற்குரிய 320 ஏக்கர் அளவிலான கொஹிலவங்குரு தோட்டக் காணியில் 25 ஏக்கர் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையாலும் 110 ஏக்கர் இலங்கை தரப்படையாலும் மேலும் 10 ஏக்கர் முன்னால் அமைச்சரொருவராலும் பயன்படுத்தப்படுவதாக மாவட்ட பணிப்பாளரால் அறிக்கையிடப்பட்டிருந்தது. இக்காணியை சட்டரீதியாக கையேற்று நட்டஈடு அல்லது குத்தகை அடிப்படையில் வழங்கி அல்லது குத்தகை வருமானமொன்றையோ பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(க) களுத்துறை வட்டத்தின் பெம்புருக்வத்த காணியின் 1828 ஆம் துண்டு பகுதி 01 ஆம் இலக்கத்தில் காண்பிக்கப்படும் 02 ஏக்கர் 00 ரூட் 15.18 பேர்ச் ஆடைத் தொழிற்சாலையொன்றுக்காக சின்டர் பெஷன்ஸ் தனியார் கம்பனிக்கு 1992 பெப்ரவரி முதல் 30 ஆண்டு காலப்பகுதிக்காக குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த போதிலும் அத்திகதி முதல் இதுவரை கம்பனியால் குத்தகை கொடுப்பனவு தவிர்ப்புச் செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 2015 பெப்ரவரி 03 ஆந் திகதி வரை மாத்திரம் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 2,661,282 ஆக இருந்ததுடன் 2016 மற்றும் 2017 ஆகிய 02 ஆண்டுகளுக்குரிய குத்தகை தொகை மற்றும் மிகைக் கட்டணமும் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு கைத்தொழில் பேட்டைகளுக்கு நீண்டகால குத்தகை கொடுப்பனவு வழங்கும் போது குத்தகை செலுத்தப்படாமை தொடர்பாக பின்பற்ற வேண்டிய நடைமுறையொன்று கைத்தொழில் அமைச்சின் இணக்கப்பாட்டுடன் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக தொடர்ந்தும் குத்தகை கொடுப்பனவு செலுத்தாமல் கைத்தொழில்கள் நடாத்திச் செல்லப்பட்டு வந்தமை அவதானிக்கப்பட்டது.

(கா) ஹங்குரங்கெத்த ரத்வெட்டிய தோட்டத்தின் தேயிலை தொழிற்சாலை கட்டிடங்களுடன் கூடிய 2 ரூட் 16 பேர்ச் அளவிலான காணி ரிகில்லகஸ்கட வ/ப சஹருவன்கெத பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்திற்கு 1997 மே 02 ஆந் திகி காணி குத்தகைக்கு வழங்கும் வழமையான முறைமையிலிருந்து விலகியும் 05 ஆண்டு குத்தகை பணத்தை ஒரே தடவையில் அறவிடாமலும் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. 2016 மே 01 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட வேண்டிய நிலுவை குத்தகை மற்றும் மிகைக் கட்டணம் ரூபா 4,596,800 ஆக இருந்ததுடன், 15 ஆண்டு காலப்பகுதியில் குத்தகை செலுத்தாமல் செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும் குத்தகை ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கோ அல்லது அதற்காக வேறு செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கி) மொனறாகல மாவட்டத்தின் யாலபோல தோட்டக் காணியில் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டிருந்த 201 ஏக்கர் அளவு 1975 ஆகஸ்ட் 24 ஆந் திகதி சீனி இணைப்பு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் பெலவத்த சீனிக் கம்பனிக்கு 1982 முதல் 1999 வரை 196 ஏக்கர் 00 ரூட் 04 பேர்ச் மற்றும் 1999 சனவரி 20 ஆந் திகதி முதல் 2011 ஆம் ஆண்டு வரை 146 ஏக்கர் 00 ரூட் 04 பேர்ச் உடமைக்காக கையளிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 5 ஆண்டு குத்தகை தொகையை ஒரே தடவையில் அறவிடாமல் சீனி இணைப்பு சபைக்கும் சீனிக் கம்பனிக்கும் உடமை கையளிக்கப்பட்டிருந்ததுடன் பெலவெத்த சீனிக் கம்பனியிடமிருந்து 1982 முதல் 2011 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டிய மொத்த நிலுவைத் தொகை ரூபா 24,542,165 ஆக இருந்தது.

(ii) இக்காணியை அளவை செய்தல் 2005 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் பயன்படுத்தப்படும் காணி அளவு 224 ஏக்கர் 02 ரூட் 38 பேர்ச் என வெளிப்படுத்தப்பட்டிருந்ததால் கம்பனி 33 ஆண்டு காலமாக 78 ஏக்கர் அளவில் அத்துமீறி பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iii) P-523 ஆம் இலக்க ஆணைக்குழுப் பத்திரத்தின் பிரகாரம் 2011 நவம்பர் 11 ஆந் திகதி முதல் 30 ஆண்டுகளுக்கு பெலவத்த சீனிக் கம்பனிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2012 ஒக்தோபர் 03 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வ/ப லங்கா சீனி (தனி) கம்பனிக்கு 2012 செப்தெம்பர் 01 ஆந் திகதி முதல் கையளிப்பு இடம்பெற்றிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு திகதியான 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் குத்தகை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கீ) 1972 இன் 1 ஆம் இலக்க மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் 2(அ) மற்றும் 3(1) பிரிவுகளிற்கு முரணாக 50 ஏக்கர்கள் மேற்படாத 09 நபர்களுடைய காணியும் ஆணைக்குழுவினால் கையேற்கப்பட்டிருந்தமை மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 45 ஆண்டுகள் அளவில் கடந்திருந்த போதிலும் அவ்வாறு கையேற்கப்பட்ட காணி அல்லது மாற்றுக்காணி வழங்குவதற்கோ ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பேர்க் தோட்டத்திலிருந்து 1729 ஏக்கர் 02 ரூட் 36 பேர்ச் 1994 ஏப்ரல் 21 ஆந் திகதி 415/10 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் ரூபா 12,183,100 ஆன பெயரளவுப் பெறுமதியொன்று கொடுப்பனவு செய்வதற்கு உடன்பட்டு அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், கூட்டுத்தாபனத்தினால் முதலீட்டு சபைக்கு இத்தோட்டம் ரூபா 120 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பேர்க் தோட்டத்தில் அமைந்துள்ள ஏபில் பொரஸ்ட் தோட்டத்திற்கு உரித்தான எகொடவத்த மற்றும் கட்டுக்கித்துலகந்த தோட்டம் என்ற பெயரில் 146 ஏக்கர் 01 ரூட் 28 பேர்ச் 1990 நவம்பர் 11 ஆந் திகதி விற்பனையொன்று மூலம் கையேற்கப்பட்டதாக ஆணைக்குழுவிற்கு மூன்று நபர்களினால் 2012 ஆம் ஆண்டில் உரித்து முன்வைக்கப்பட்டிருந்தது. இச்சிக்கல்களை தீர்வு செய்தல் காணி உயர் எல்லை பீவினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாமலும் சபையின் அளவுப்பிரிவிற்கோ அல்லது சட்ட பிரிவிற்கோ ஏனைய ஆவணங்கள் அல்லது ஆலோசனையொன்றோ பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் அக்காணி தனியார் காணி என்பதை உறுதிப்படுத்துவதற்கு உதவிப் பணிப்பாளரால் (வருமானம்) நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உரித்து சமர்ப்பித்த தரப்பினரால் அக்காணிக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் சரியான தன்மையை ஆணைக்குழுவினால் உறுதிப்படுத்தப்படாதிருந்ததுடன் அவ்வாறு தனியார் காணியாக பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தமை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கும் முதலீட்டு சபைக்கும் சர்ச்சைக்குரியதாக இருந்தது.

(ii) இந்த தோட்டத்திலிருந்து ஆணைக்குழு சுவீகரிக்கும் போது உரிய உரித்தாளிகளுக்கு எந்தளவு காணிக்காக இழப்பீடு செலுத்தப்பட்டது, இழப்பீடு செலுத்தப்பட்ட திகதி, செலுத்திய தொகை போன்ற தகவல்களை உறுதிப்படுத்துவதற்கு இழப்பீட்டு கொடுப்பனவு பதிவேடுகள் அல்லது ஆவணங்கள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அதன் பிரகாரம் உரித்து சமர்ப்பித்த தரப்பினர் குறிப்பிட்டுள்ள காணி பகுதி தொடர்பாக கம்பனிக்கு உள்ள உரித்தை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் காணப்படவில்லை.

(ஆ) மஹ 385 இன் கீழ் உரித்திற்கு உட்படாத காணியொன்று 1972 ஆம் ஆண்டின் போது ஆணைக்குழுவிற்கு கையேற்கப்பட்டிருந்ததுடன் இதற்காக மாற்று காணியொன்றாக அம்பலமானவத்த காணியில் 89 ஏக்கர் உரிமையாளருக்கு 2001 செப்தெம்பர் 25 ஆந் திகதி அளவிடப்பட்டு ஒதுக்கப்பட்டிருந்தது. இக்காணியில் அத்துமீறிய குடியிருப்பாளர்கள் இருந்ததன் காரணமாக கொண்டு உரிய உரித்தாளர்களினால் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு ஒதுக்கப்பட்டிருந்த காணியில் 25 ஏக்கர் சிலிக்கா செயற்திட்டத்திற்காக தனியார் கம்பனியொன்றுக்கு 2011 ஆம் ஆண்டில் 15 ஆண்டுகளுக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 870,000 தொகையை முற்பணமாக அறவிடுவது தவிர எந்தவித குத்தகையொன்றும் அறவிடுவதற்கோ 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஹொரண குருகொடவில் அமைந்துள்ள பேரன் தோட்டத்தில் ஒரு ஏக்கர் அளவிலான காணி குத்தகைக்கு வழங்கும் வழமையான நடைமுறைக்கு புறம்பாக ஆடைத் தொழிற்சாலையொன்றை ஆரம்பிப்பதற்காக அபர்சிம் கார்மன்ட் நிறுவனத்திற்கு 2003 ஆம் ஆண்டின் போது உடமை கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2003 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை ரூபா 4,087,311 கூட்டுத்தொகையான குத்தகை தொகை கொடுப்பனவு தவிர்ப்புச் செய்யப்பட்டிருந்தது. மேலும், அந்நிறுவனத்தினால் ஆணைக்குழுவின் எவ்வித அனுமதியும் பெற்றுக்கொள்ளாமல் அக்காணி மற்றும் கட்டிடம் என்பவற்றை ஆடை அச்சிடல் வியாபார நிறுவனமொன்றான பிரிடிஷ் பிலியன் தனியார் கம்பனிக்கு 2013 யூன் 26 ஆந் திகதி சத்தியக் கடதாசியொன்று மூலம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் பின்னர் ஆணைக்குழுவிற்கு விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் 2013 நவம்பர் 29 ஆந் திகதி 30 ஆண்டு காலப்பகுதிக்கு ஆணைக்குழுவின் மூலம் அத்தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பழைய குத்தகையாளரின் நிலுவை குத்தகை தொகையான ரூபா 4,087,311 தொகை தவணையாக கொடுப்பனவு செய்வதற்கு புதிய குத்தகையாளர் இணங்கியிருந்ததுடன், அதன் பிரகாரம் 2017 மே 04 ஆந் திகதி வரையிலும் ரூபா 3,746,822 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேலும் அறவிடுவதற்கு உள்ள நிலுவைக் குத்தகை தொகை ரூபா 340,849 ஆக இருந்ததுடன், நிலுவையின் மீது செலுத்த வேண்டிய 10 சதவீத மிகைக் கட்டணமாக ரூபா 1,825,000 தொகை ஆணைக்குழுவினால் எந்த அடிப்படையொன்றும் இல்லாமல் விடுவிக்கப்பட்டிருந்தது.

(ii) தற்போது குத்தகையாளர் உடமை பொறுப்பேற்கப்பட்ட 2013 செப்தெம்பர் 03 ஆந் திகதி முதல் 04 ஆண்டு காலப்பகுதிக்காக புதிய மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 8,640,000 ஆக இருந்ததுடன் அத்தொகை 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) இந்தக் காணி 2003 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யும் போது காணியின் பெறுமதி ரூபா 6,000,000 எனவும் வருடாந்த குத்தகை வாடகை ரூபா 360,000 எனவும் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டில் மதிப்பீடு ரூபா 3,000,000 மற்றும் குத்தகை வாடகை ரூபா 180,000 எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 10 வருடங்கள் கடந்ததன் பின்னர் அவ்வாறு வருடாந்த குத்தகை வாடகை சரி பாதியாக குறைக்கப்பட்டமை சிக்கலான நிலைமையொன்றாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. பொதுவாக குத்தகை தொகை 5 ஆண்டுகளுக்கு 5 ஆண்டுகள் அதிகரிக்கப்பட வேண்டிய போதிலும், 10 ஆண்டுகளிற்கு பின்னர் குத்தகை தொகை சரி பாதியாக குறைக்கப்பட்டிருந்தது. இக் காணி பகுதி பிரதான மதிப்பீட்டாளர் ஊடாக மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அப்போது வருடாந்த குத்தகை வாடகை ரூபா 1,662,000 என பிரதான மதிப்பீட்டாளர் குறிப்பிட்டுள்ளதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**4.6 வாகனப் பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமாக காணப்பட்ட மிட்சுபிஷி கெப் வண்டியில் ரூபா 526,700 ஆன திருத்த வேலையொன்றை தனியார் கம்பனியொன்றின் மூலம் நிறைவேற்றுவதற்காக 2016 ஒக்தோபர் 05 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இவ்வறிக்கை திகதி வரையில் திருத்த வேலை பூர்த்தி செய்யப்பட்டு வாகனம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கெப் வண்டியொன்று திருத்த வேலையொன்றுக்காக தனியார் கராஜ் ஒன்றுக்காக 2016 ஒக்தோபர் 05 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் வண்டி 09 மாதங்களும் 18 நாட்களும் தாமதித்து திருத்த வேலை பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் வாகனத்தை கையளிக்கும் கடிதத்தின் பிரகாரம் தாமதக் கட்டணங்கள் அல்லது ஏதேனும் சதவீதமொன்றோ கழித்துக்கொள்ளப்படாமல் முழுத்தொகையில் 10 சதவீதப் பணத்தை திருப்பி கொடுப்பனவு செய்தல் என்ற இணக்கப்பாட்டுடன் இரண்டு மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டு பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே இங்கு திருத்த வேலைகளுக்காக 291 நாட்கள் எடுத்திருந்ததன் அடிப்படையில் தாமதம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 யூன் 29 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் போட்டி காப்புறுதி சந்தைக்கு இடமளித்து அரச பெறுகை கொள்வனவு வழிகாட்டி பின்பற்றப்பட்டு நிறுவனம் தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக ஆணைக்குழுவினால் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திலிருந்து ஆணைக்குழுவிற்கு சொந்தமான வாகனங்களுக்காக காப்புறுதி மேவுகை பெற்றுக் கொள்ளப்பட்டு 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 1,142,385 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**4.7 பதவியணியினர் முகாமைத்துவம்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீ.ஈ.டீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 (உ) பிரிவின் பிரகாரம் புதிய பதவியணியொன்றின் தேவைப்பாடானது காணப்பட்டால் அதற்கான தேவைப்பாட்டை உறுதிப்படுத்தி பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத 54 பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். மேலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் பிரதிப் / உதவிப் பணிப்பாளர் பதவியொன்றில் 3 மதிப்பிட்டு பரிசோதகர்கள் மற்றும் இரண்டு திட்டமிடல் வல்லுனர்கள் என 06 உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது.

**5. நிலைபேறான அபிவிருத்தி**

2017 ஆகஸ்ட் 17 ஆந் திகதி என்பி/எஸ்பீ/எஸ்டீஜி/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செயலாளரினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ பிரகாரம், ஒவ்வொரு அரச நிறுவனமொன்றும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் தமது விடயப் பரப்பிற்கு கீழ் வரும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென இது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

2007 ஆம் ஆண்டினுள் துரித உரித்து வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் உரித்து வழங்குதவற்காக கோவைகளைப் பரீட்சித்தல் தவிர 02 உள்ளகக் கணக்காய்வு விசாரணைகள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த பிரிவுகள் மேவுகை செய்யப்படக்கூடிய வகையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. காணி விற்பனை மற்றும் குத்தகைக்கு வழங்குதல் தொடர்பான பரிசோதனைகள், இழப்பீடு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் செயற்பாடுகள் தொடர்பான பரிசோதனைகள், வருமானம் மற்றும் அளவீட்டு பிரிவின் நடவடிக்கைகளை பரிசோதித்தல், சட்ட பிரிவின் செயற்பாடு மற்றும் மாவட்ட அதிகார சபைகளின் செயற்பாடுகளில் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 6.2 பெறுகை மற்றும் ஒப்பந்த செயற்பாடு

#### 6.2.1 பெறுகைகள்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் பிரதான பெறுகைத் திட்டம் உள்ளடக்கப்பட்ட வருடாந்த பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 6.2.2 ஒப்பந்த செயற்பாடுகளின் குறைபாடுகள்

(அ) ரூபா 5,282,146 தொகையான பொறியியலாளர் மதிப்பீட்டிலான புத்தளம் மாவட்ட அதிகார சபைக் கட்டிட நிர்மாண ஒப்பந்தம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மதிப்பீட்டுத் தொகையில் 40 சதவீதமான ரூபா 2,112,878 தொகைக்கு மாவட்ட செயலகத்துடன் எந்தவித ஒப்பந்தமொன்றையும் மேற்கொள்ளப்படாமல் 2014 நவம்பர் 27 ஆந் திகதி விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அப்பணத்தை விடுவித்து ஓராண்டிற்கு அண்மித்த காலம் கடக்கும் வரை உரிய நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆரம்ப மதிப்பீட்டை தயாரிக்கும் போது இனங்காணப்பட்டிருந்த உடைத்து அகற்றப்பட வேண்டிய கட்டிடம் தொடர்பாக ரூபா 296,300 ஆன மேலதிக மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு நிர்மாணத்தை மேற்கொள்ளும் ஒப்பந்தகாரருக்கு அது கையளிக்கப்பட்டிருந்தது.

(iii) கட்டிட திட்டத்திற்காக உரிய உள்ளூராட்சி மன்றங்களின் அங்கீகாரம், நகர அபிவிருத்தி அதிகாரசபையினதும் சுற்றாடல் அதிகாரசபையினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) மாவட்ட செயலாளர் மற்றும் உரிய ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கை பிரகாரம் வேலை பூர்த்தி செய்து கையளிக்க வேண்டிய திகதி 2016 சனவரி 11 ஆந் திகதியாக இருந்த போதிலும் 2016 யூலை 29 ஆந் திகதியே கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒப்பந்தகாரருடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணம் ஒரு நாளைக்கு ரூபா 2,362 வீதம் 6 மாதங்களுக்கு அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 800,718 ஐ கருத்திற் கொள்ளாமல் ஆணைக்குழுவினால் மொத்த தொகையும் மாவட்ட செயலாளருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ஆணைக்குழுவிற்கு காணிகளின் உரித்தை கையளிப்பதற்காக 2017 ஆகஸ்ட் 21 ஆந் திகதி காலி அல்பிட்டிய விளையாட்டரங்கில் நடைபெற்று உரித்து வழங்கல் விழாவிற்காக ரூபா 5,950,280 செலவிடப்பட்டிருந்தமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.4.1(ஆ) பிரிவின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) உரித்து வழங்கல் வைபவத்தின் அனைத்து நடவடிக்கைகளுக்காக கூறு விலை கோருதல், வழங்குனர் தெரிவு செய்தல், விதந்துரைப்புகளை தயாரித்தல் போன்ற செயற்பாடுகள் பெறுகை வழிகாட்டிகளிலிருந்து விலகி மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iii) அறிவித்தல் பலகை அச்சிடல் மற்றும் உரித்து உறை அச்சிடலுக்காக ரூபா 1,024,380 செலவிடப்பட்டிருந்த போதிலும் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9 ஆம் பிரிவின் பிரகாரம் அச்செயற்பாடுகளுக்காக எழுத்து மூல உடன்படிக்கைக்கு வந்திருக்கவில்லை. (iv) பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.8 ஆம் பிரிவின் பிரகாரம் திடீர் அனர்த்த இயற்கை சந்தர்ப்பமொன்றின் போது அல்லது எதிர்பாராத சமூக பொறுப்பு போன்ற சந்தர்ப்பங்கள் அவசர பெறுகையாக கருதி கொள்வனவு மேற்கொள்ளக் கூடியதாக இருந்த போதிலும் அதற்கு முரணாக உரித்து வழங்கும் விழா செயற்பாடுகள் அவசர பெறுகையாக கருதி ரூபா 5,950,280 செலவிடப்பட்டிருந்தது.

(இ) ஆணைக்குழுவின் 2017 நவம்பர் 05 ஆந் திகதி மாத்தறையில் நடாத்தப்பட்ட உரித்து விழாவிற்காக ரூபா 909,395 செலவிடப்பட்டிருந்தது. இங்கு பாட்டுக்கள் பாடுவதற்காக நான்கு பாடகர் பாடகிகளுக்கு ரூபா 200,000 செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உரித்து வழங்குதல் அடிப்படை மற்றும் பிரதான நோக்கமான விழாவொன்றில் மொத்த செலவினத்தில் 22 சதவீதம் அதற்கு புறம்பான செயற்திட்டமொன்றிற்காக செலவிடப்பட்டதன் காரணமாக நி.பி 128 (ஐ) பிரகாரம் அரசின் வேலைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், வெளிப்படை தன்மை, நேர்மை போன்ற விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்ட கட்டிடத்தின் ஒவ்வொரு பிரிவினையும் அலுமினிய பகுதிகளாக்குவதற்கு ரூபா 768,200 செலவிடப்பட்டிருந்தது. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இச் செயற்திட்டத்திற்காக பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பெறுகை வழிகாட்டல் கோவையின் 89(ஆ) பிரிவின் பிரகாரம் எழுத்து மூல உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மொத்த கிரயத்தில் 20 சதவீதத்திற்கு அண்மித்த அளவு முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது.

(iii) அவசர பெறுகையாக கருதி உரிய செய்பாடு நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.8.1 ஆம் பிரிவின் பிரகாரம் அவசர பெறுகையொன்றாக அர்த்தப்படுத்தும் செயற்பாட்டிற்கு உட்படக்கூடியது என்று அறியப்படவில்லை.

(iv) நிறைவேற்றப்பட்ட செயற்பாடு வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக நிறுவனத்தின் பொறுப்பு வாய்ந்த மற்றும் தொழில்நுட்ப அறிவு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்படாமல் பணக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானங்களுக்கு இடையே 32 சதவீதம் முதல் 1944 சதவீதம் வரையான வீச்சிலான விலகலும் பாதிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையே 28 சதவீதம் முதல் 808 சதவீதம் வரையிலான விலகலும் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மூலதனச் செலவினத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த பாதீட்டு நிதி ஏற்பாடுகளில் கட்டிடங்கள் நிர்மாணம் மற்றும் மோட்டார் வாகனங்கள் கொள்வனவு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த 100 சதவீத நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்ததுடன், கணனி மற்றும் உப பாகங்கள் கொள்வனவிற்கான நிதி ஏற்பாடுகளில் 87 சதவீதமும் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் 65 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6.4 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 6.1.4 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கைகள் 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.5 தீர்க்கப்படாதுள்ள செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

கணனி மென்பொருள் தொகுதியொன்றை கொள்வனவு செய்வதற்கு 2002 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 17,000,000 தொகை 16 வருடங்களாக கணனிகளுக்கான முற்பணமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த முற்பணத்தை தீர்த்துக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் கணக்காய்வுத் தினமான 2018 மார்ச் 30 ஆந் திகதி வரையிலும் தவறியிருந்தது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பாகக் குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | | அவதானிப்பு |
|---|---|---|---|
| (அ) | செயற்பாட்டுக் கட்டணம் | (i) | அரச துறைகளுக்காக காணி கையேற்றுவதற்கான முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்படாமை |
| | | (ii) | சுவீகரிப்பு விண்ணப்பங்கள் முறைமையாக பதிவேடுகளுக்கு உட்படுத்தப்படாத காரணத்தால் அது தொடர்பான செயற்பட்டுள்ள முறை திட்டவட்டமாக செய்ய முடியாமை |
| | | (iii) | சுவீகரிப்பு செயற்பாடு முடியுமான வரையில் பூர்த்தி செய்யப்பட்டு இழப்பீட்டை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்காமை |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வாகன முகாமைத்துவம் | (i) | வாகன விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை |
| | | (ii) | வாகன சம்பவப் பதிவேட்டுப் புத்தகங்கள் நாளது வரையாக பேணப்படாமை |
| (இ) | செயற்திட்டங்களுக்கான காணி குத்தகைக்கு வழங்குதல் | (i) | குத்தகையாளர் தெரிவு செய்வதற்கு நடைமுறையொன்று காணப்படாமை |
| | | (ii) | ஆரம்ப தொகை அறவிடப்படாமல் உடமை கையளிப்பு இடம்பெற்றிருந்தமை |
| | | (iii) | குத்தகை உடன்படிக்கை காணப்படாமை பேரில் நிலுவை குத்தகை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்காதிருந்தமை |
| | | (iv) | அளவிட்டு கட்டளை வழங்கப்பட்டிருக்கையில் அளவீட்டு நடவடிக்கை தயாரிக்காமை |
| | | (v) | விடுவிக்கப்பட்டுள்ள காணிகளை காலரீதியாக இனங்கண்டு ஆக்கபூர்வமான வருமானம் உழைக்கும் செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்துவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | (vi) | செயற்திட்ட அறிக்கை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கையில் செயற்திட்டக் குழுக்கள் மூலம் மதிப்பீடு செய்து தீர்வு வழங்கும் தாமதத்தின் பேரில் காணி விளைவற்றுக் காணப்பட்டமையால் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தமை |
| | | (vii) | அமைச்சரவை பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தொடர்பு படுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்காக துரிதமாக அதற்கு தொடர்புபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணமாக தாமதித்தமை |
| (ஈ) | களஞ்சிய கட்டுப்பாடு | (i) | பொருட் பட்டோலை சமப்படுத்தப்படாமை |
| | | (ii) | மத்தியமடுத்தப்பட்ட பொருட் பதிவேடு மற்றும் பிரிவுகளில் பொருட் பதிவேடு சமப்படுத்தாமை |
| (உ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | | கைதவிர்ப்புச் செய்யப்பட்ட நிலையான சொத்துக்களை நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை |
| (ஊ) | முற்பணக் கட்டுப்பாடு | | செயற்பாடு நிறைவு பெற்றவுடனயே முற்பணம் தீர்வு செய்யப்படாமை |